Australian Government
Department of Home Affairs

# பாதுகாப்பு விசாக்கள் புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானது

பல நாடுகளைப் போலவே, ஆஸ்திரேலியாவும் புகலிடக் கோரிக்கையாளர்களுக்குப் பாதுகாப்பை வழங்குவதற்கான விசாவைக் கொண்டுள்ளது.

ஒரு பாதுகாப்பு விசா (துணைப்பிரிவு 866) தனது சொந்த நாட்டில் குறிப்பிடத்தக்க தீங்கு அல்லது ஒடுக்குமுறை போன்ற உண்மையான அபாயத்தில் இருக்கும் நபர் ஆஸ்திரேலியாவில் நிரந்தரமாக வாழ அனுமதிக்கிறது. பாதுகாப்பு விசா என்பது ஆஸ்திரேலியாவில் நீண்ட காலம் தங்கி வேலை செய்ய விரும்புபவர்களுக்கானது அல்ல.

நீங்கள் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே இருந்தால் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க முடியாது. நீங்கள் செல்லுபடியாகும் விசாவில் ஆஸ்திரேலியாவிற்கு வந்திருக்க வேண்டும் மற்றும் வந்திறங்கியடன் குடியேற்ற அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

செயல்முறைப்படுத்தும் நேரத்தை விரைவுபடுத்த பாதுகாப்பு விசா விண்ணப்பச் செயல்முறைகளில் பெரிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலான புதிய விண்ணப்பங்கள் சமீபத்திய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கிட்டத்தட்ட 8 மடங்கு வேகமாக முடிவு செய்யப்படுகின்றன. இதன் பொருள் என்னவென்றால் தேவை உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு விசாக்களை விரைவாக வழங்குவதும், மற்றும் ஆஸ்திரேலியாவில் பணிபுரிவதற்காகவோ அல்லது தங்களுடைய காலத்தை நீட்டிப்பதற்காகவோ பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு விரைவாக நிராகரிப்பதுமாகும்.

உங்களுக்கு ஆஸ்திரேலியாவில் புகலிடம் தேவையில்லை என்றால், பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டாம். பாதுகாப்பு விசா அளவீடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களை நாங்கள் உடனடியாக நிராகரிக்கிறோம்.

பாதுகாப்பு விசாவிற்கு (துணைப்பிரிவு 866) நீங்கள் விண்ணப்பிக்க எண்ணினால், உங்களுடைய மாநிலத்தில் அல்லது பிரதேசத்தில் சிறப்பு அந்தஸ்து அகதிகள் மற்றும் குடிவரவுச் சட்ட வழங்குநரிடமிருந்து இலவசச் சட்ட உதவியைப் பெறுமாறு நாங்கள் உங்களைப் பலமாக ஊக்குவிக்கிறோம்.


- விரைவான விசா செயல்முறைப்படுத்தல்
- புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானப் பாதுகாப்பு
- இலவசச் சட்ட உதவி
- உங்கள் பொறுப்புகள்
- பயணக் கட்டுப்பாடுகள்

- – [சரியான ஆலோசனையை நாடவும்]
- – [சட்டவிரோத செயல்பாட்டாளர்களிடம் கவனமாக இருக்கவும்]
- – [உங்களுக்குப் பாதுகாப்பு விசா நிராகரிக்கப்பட்டால்]
- – [செல்லத்தக்க விசா இல்லாமல் நீங்கள் ஆஸ்திரேலியாவில் தங்கினால்]
- – [பிற விசாத் தெரிவுகள்]
- – [காலாவதியாகும் விசாவிற்கான உதவி]
- – [உங்கள் விசா விண்ணப்பத்தில் உதவி]

# விரைவான விசா செயல்முறைப்படுத்தல்

அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய மாற்றங்களின் கீழ், பாதுகாப்பு விசாவிற்கான (துணைப்பிரிவு 866) புதிய விண்ணப்பங்களில் பெரும்பாலானவை சமீபத்திய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது ஏறக்குறைய 8 மடங்கு வேகமாக முடிவு செய்யப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவில் உங்களுக்குப் பாதுகாப்பு தேவையில்லை என்றாலோ அல்லது பாதுகாப்பு விசா அளவீடுகளைப் பூர்த்தி செய்யவில்லை என்றாலோ, உங்கள் விண்ணப்பம் விரைவில் நிராகரிக்கப்படும்.

உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்ற விசாக்கள் இருக்கலாம். உங்களுக்கான சரியான விசாவைக் கண்டறிய, உங்கள் விருப்பங்களை ஆராய்ந்து பார்க்கவும்.

# புகலிடக் கோரிக்கையாளர்களுக்கானப் பாதுகாப்பு

தாயகம் திரும்பினால் கணிசமான கேடு நேரக்கூடிய உண்மையான அபாயத்தை எதிர்கொள்ளும் நபர்கள் (அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்கள்) அல்லது  பின்வரும் காரணிகளின் அடிப்படையில் ஏற்படும் துன்புறுத்தப்படுவதற்கான உண்மையான வாய்ப்புள்ள நபர்களுக்கானவை பாதுகாப்பு விசாக்கள்:

- இனம்
- மதம்
- தேசியம்
- ஒரு குறிப்பிட்ட சமூகக் குழுவின் அங்கத்துவம் அல்லது
- அரசியல் கருத்து.

பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க, நீங்கள் செல்லுபடியாகும் விசாவில் ஆஸ்திரேலியாவில் இருக்க வேண்டும் மற்றும் வந்திறங்கியவுடன் குடியேற்ற அனுமதி பெற்றிருக்க வேண்டும்.

ஊதியம் பெறும் வேலையை நீங்கள் பெறுவதற்கு ஆஸ்திரேலியாவில் நீங்கள் தங்கியிருப்பதை நீட்டிக்கும் ஒரு வழிமுறையாகப் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

வழங்கப்பட்ட எண்ணிக்கையை விட கணிசமாக அதிகமான பாதுகாப்பு விசா விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன. 85 விழுக்காட்டுக்கும் அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுகின்றன, ஏனென்றால் அவை விசாவிற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லை. சில நாட்டு மக்களின் விண்ணப்பங்கள் 100 விழுக்காட்டுக்கு மிக அருகில் நிராகரிப்பு விகிதங்களைக் கொண்டுள்ளன.

உங்கள் பாதுகாப்பு விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு, நீங்கள் செல்லுபடியாகும் விசாவை வைத்திருக்கவில்லை என்றால் நீங்கள் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும். உங்களிடம் செல்லத்தக்க விசா இல்லையென்றால், நீங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு ஆஸ்திரேலியாவில் இருந்து வெளியேற்றப்படலாம்.

நிராகரிக்கப்பட்ட பாதுகாப்பு விசா விண்ணப்பம் உங்கள் குடிவரவுப் பதிவேட்டில் வாழ்நாள் முழுவதும் இருக்கும். இது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் எதிர்காலத்தில் ஆஸ்திரேலியா செல்வதைக் மிகவும் கடினமாக்கலாம் மற்றும் எதிர்காலத்தில் நீங்கள் விண்ணப்பிக்கும் விசாவைப் பொறுத்து, பிற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்களையும் பாதிக்கக்கூடும்.

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது, உங்கள் சொந்த நாட்டிலிருந்து ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருகிறீர்கள்.

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பித்தால், பின்வருவனவற்றில் ஒன்று அல்லது இரண்டும் உண்மை என்று உறுதியளிக்கிறீர்கள்:

- குறிப்பிடத்தக்கக் கேடு அல்லது ஒடுக்குமுறையின் உண்மையான அபாயத்தை எதிர்கொள்ளாமல் நீங்கள் தாயகத்திற்குச் செல்ல முடியாது.
- நீங்கள் அத்தகைய கோரிக்கைகளை வைத்துள்ள ஒருவரின் குடும்ப உறுப்பினர்.

நீங்கள் (உங்கள் சொந்த நாட்டைத் தவிர) வேறு நாட்டில் சட்டப்பூர்வமாக நுழைந்து பாதுகாப்பாக வாழ முடியுமானால், உங்களுக்குப் பாதுகாப்பு விசா கிடைக்காது.

ஆஸ்திரேலியாவில் உங்களுக்குப் புகலிடம் தேவைப்பட்டால் மட்டுமே நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஆஸ்திரேலியாவின் பாதுகாப்புக் கடமைகளைப் பற்றி மேலும் படிக்கவும்.

# இலவசச் சட்ட உதவி

பாதுகாப்பு விசாவிற்கு (துணைப்பிரிவு 866) நீங்கள் விண்ணப்பிக்க எண்ணினால், உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சிறப்பு அந்தஸ்து அகதிகள் மற்றும் குடிவரவுச் சட்ட வழங்குநரிடமிருந்து **இலவசச் சட்ட உதவியைப்** பெறுமாறு நாங்கள் உங்களைப் பலமாக ஊக்குவிக்கிறோம்.

உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சட்ட வழங்குநர்களின் பட்டியல்

| மாநிலம் அல்லது பிரதேசம் | பெயர் | இணையதளம் |
|---|---|---|
| Australian Capital Territory | Legal Aid ACT | www.legalaidact.org.au |
| New South Wales | Refugee Advice and Casework Service | www.racs.org.au |
| Northern Territory | Refugee Legal | www.refugeelegal.org.au |

| மாநிலம் அல்லது பிரதேசம் | பெயர் | இணையதளம் |
|---|---|---|
| Queensland | Refugee and Immigration Legal Service | www.rails.org.au |
| South Australia | Legal Services Commission of SA | www.lsc.sa.gov.au |
| Tasmania | Tasmanian Refugee Legal Service | www.trls.org.au |
| Victoria | Refugee Legal | www.refugeelegal.org.au |
| Western Australia | Circle Green Community Legal | www.circlegreen.org.au |

இந்த வழங்குநர்கள் பின்வரும் வகையில் உங்களுக்கு உதவமுடியும்:

- நீங்கள் ஒரு பாதுகாப்பு விசாவிற்குத் தகுதியுடையவரா அல்லது வேறு பொருத்தமான விசாவிற்குத் தகுதியுடையவரா என்பதைக் கண்டறிய
- விண்ணப்ப செயல்முறையைப் புரிந்து கொள்ள
- பாதுகாப்பு விசா நிராகரிப்பின் தாக்கங்களைப் புரிந்து கொள்ள
- தேவைப்பட்டால், பாதுகாப்பு விசா விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பிக்க.

உங்கள் மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சட்ட உதவி அல்லது சமூகச் சட்ட மையத்திலிருந்து இலவச சட்ட உதவியையும் நீங்கள் பெறலாம்.

# உங்கள் பொறுப்புகள்

பாதுகாப்பு விசாவிற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது, வேறு யாரேனும் உங்களுக்காக விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தாலும், நீங்கள் வழங்கும் அனைத்துத் தகவல்களும் உண்மையாகவும் துல்லியமாகவும் இருப்பதை உறுதி செய்வது உங்கள் பொறுப்பாகும்.

நீங்கள் எதற்காக விண்ணப்பிக்கிறீர்கள் என்பதையும், விண்ணப்பத்தில் என்ன தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதையும் புரிந்து கொள்ளாமல் உங்களுக்கான பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க யாரையும் நீங்கள் அனுமதிக்கக் கூடாது.

ஆஸ்திரேலியாவில் வாழும் சமூகங்கள், பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிப்பவர்களுக்குத் தவறான தகவல் பரவுவதைத் தடுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தவறான தகவல்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களைச் சமர்ப்பிப்பதால் ஏற்படும் அபாயங்கள் பற்றிய விழிப்புணர்வைப் பரப்புவதும், பதிவு செய்யப்படாத புலம்பெயர்வு ஆலோசகரை ஈடுபடுத்துவதும் இதில் அடங்கும்.

பாதுகாப்பு விசா விண்ணப்பத்தில் தவறான  தகவல்கள் அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்கள் அல்லது தவறான ஆவணங்கள் போன்றவற்றை வழங்கினால், பெரும் அபராதம், 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனைக்கான சாத்தியக்கூறு அல்லது இவ்விரண்டும் சேர்ந்தது உள்ளிட்ட கடுமையான விளைவுகள் உள்ளன. சுற்றுலாப் பயணியர், மாணவர் அல்லது PALM scheme visa போன்ற தற்காலிக வேலை விசாவில் கூட, உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் ஆஸ்திரேலியாவுக்குத் திரும்ப வருவது எப்போதும் கடினமாக இருக்கலாம்.

பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் ஒருவர், அவர்களுக்கான ஆதரவுக் கடிதத்தை எழுதச் சொன்னால்,  அவர்கள் தாயகம் திரும்பினால்  அவர்கள் கணிசமான கேடு

நேரக்கூடிய அபாயத்தை எதிர்கொள்ளுவார்கள் அல்லது  ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவார்கள்  என்று நீங்கள் நம்பினால் மட்டுமே நீங்கள் இதைச் செய்ய வேண்டும். அவர்களது மாநிலம் அல்லது பிரதேசத்தில் உள்ள சிறப்பு அந்தஸ்து அகதிகள் மற்றும் குடிவரவுச் சட்ட வழங்குநரிடமிருந்து இலவசச் சட்ட உதவியை அணுக அவர்களை ஊக்குவிக்கவும்.

# பயணக் கட்டுப்பாடுகள்

நீங்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது, நீங்கள் ஆஸ்திரேலியாவின் பாதுகாப்பைக் கோரும் நாட்டிற்குப் பயணம் செய்தால், உங்கள் குடும்பம் அங்கு வசித்தாலும்கூட, உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

உங்களுக்குப் பாதுகாப்பு விசா வழங்கப்பட்டால், நீங்கள் எந்த நாட்டிலிருந்து புகலிடம் கோரினீர்களோ அந்த நாட்டிற்கு  ஆஸ்திரேலிய அரசாங்கத்தின் அனுமதியின்றி உங்கள் குடும்பத்தினர் அங்கு வசித்தாலுமே உங்களால் அங்கு செல்ல முடியாது.

# சரியான ஆலோசனையை நாடவும்

பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிப்பது குறித்த ஆலோசனைகளைப் பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்வு முகவர்கள் மற்றும் ஆஸ்திரேலியச் சட்ட வழக்குரைஞர்களிடமிருந்து மட்டுமே பெற வேண்டும். விலக்கு அளிக்கப்பட்ட நபரிடம் இருந்தும் பொதுக் குடிவரவு உதவியை நீங்கள் பெறலாம்.

விலக்கு அளிக்கப்பட்ட நபர் என்பவர் பதிவு செய்யப்பட்ட  புலம்பெயர்வு முகவர் அல்லது சட்ட வழக்குரைஞர் அல்லாதவர் மற்றும் பின்வருபவர்களாவர்:

- உங்கள் பரிந்துரையாளர் அல்லது பொறுப்பேற்பாளர்
- உங்கள் நெருங்கிய குடும்ப உறுப்பினர்
- ஒரு பாராளுமன்ற உறுப்பினர்
- தூதரகப் பணியின் ஓர் உறுப்பினர்
- தூதரக பதவியின் ஓர் உறுப்பினர்
- ஒரு சர்வதேச அமைப்பின் ஓர் உறுப்பினர்.

பதிவுசெய்யப்பட்ட  புலம்பெயர்வு முகவர் அல்லது ஆஸ்திரேலியச் சட்ட வழக்குரைஞரராக இல்லாத ஒருவர் அவர்களின் உதவிக்காக **உங்களிடம் கட்டாயம் கட்டணம் வசூலிக்கக் கூடாது**. விலக்குப் பெற்ற நபர் ஒருவர் கட்டணம் வசூலிப்பது சட்டவிரோதமானது.

இடம்பெயர்வு முகவர்கள் பதிவு ஆணையத்தின் (OMARA) இணையதளத்தில் உள்ள இணையப் பதிவேட்டில் தேடுவதன் மூலம் ஒருவர் பதிவுசெய்யப்பட்ட  புலம்பெயர்வு முகவர்தானா என்பதை நீங்கள் சரிபார்க்கலாம், அல்லது Australian legal practitioner (ஆஸ்திரேலிய சட்டப் பயிற்சியாளரிடம்) இருந்து உதவி பெறுவது பற்றி மேலும் அறியலாம்.

ஆஸ்திரேலியாவில் உங்கள் விண்ணப்பத்தில் உங்களுக்கு உதவலாம்  என்பதைப் பற்றி மேலும் படிக்கவும்.

பதிவு செய்யப்பட்ட புலம்பெயர்வு முகவரைத் தேர்ந்தெடுப்பதற்கான படிநிலைகளைக் கண்டறியவும்.

நீங்கள் எதற்காக விண்ணப்பிக்கிறீர்கள் மற்றும் விண்ணப்பத்தில் என்ன தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளாமல் உங்களுக்கான பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்க யாரையும் அனுமதிக்கக் கூடாது.  வேறு யாரேனும் உங்களுக்காகப் பூர்த்தி செய்து சமர்ப்பித்தாலும், உங்கள் விண்ணப்பத்தில் உள்ள அனைத்தும் உண்மை என்பதை நீங்கள் கட்டாயம் உறுதிப்படுத்த வேண்டும்.

# சட்டவிரோத செயல்பாட்டாளர்களிடம் கவனமாக இருக்கவும்

பதிவுசெய்யப்பட்ட புலம்பெயர்வு முகவராகவோ அல்லது  ஆஸ்திரேலியச் சட்ட வழக்குரைஞுரராகவோ இல்லாவிட்டால், புலம்பெயர்வு ஆலோசனைக்கு ஒருவர் கட்டணம் வசூலிப்பது சட்டவிரோதமானதாகும். பதிவுசெய்யப்பட்ட இடம்பெயர்வு முகவர் அல்லது ஆஸ்திரேலிய வழக்கறிஞராக இல்லாத ஒருவரை நீங்கள் பயன்படுத்தினால் தவறான ஆலோசனையைப் பெறும் அபாயம் உள்ளது, அதனால் ஆஸ்திரேலியாவில் நீங்கள் தங்குவதற்கான எந்த வாய்ப்பும் அபாயத்துக்குள்ளாகும் சாத்தியம் உள்ளது.

சட்டவிரோத செயல்பாட்டாளர்கள் பெரும்பாலும் சமூக ஊடகங்களிலும் இணைய அரட்டைக் குழுக்களிலும் தங்கள் சேவைகளை விளம்பரப்படுத்துகிறார்கள். அவர்கள் பாதுகாப்பு விசாவிற்கு விண்ணப்பிக்கும் போது சில சமயங்களில் விண்ணப்பதாரர்களிடம் தவறானதகவல்களை அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்களை வழங்குமாறோ அல்லது தவறான ஆவணங்களை வழங்குமாறோ கூறுகின்றனர், மேலும் சிலர் இந்தத் தவறான ஆலோசனைக்காக அதிகப் பணம் வசூலிக்கின்றனர்.

யாராவது உங்களுக்குக் குடிவரவு உதவியை சட்டவிரோதமாக வழங்க முயற்சித்தால், Border Watch Online Report  (எல்லைக் கண்காணிப்பு இணைய அறிக்கையை) பயன்படுத்தி நீங்கள் எங்களிடம் தெரிவிக்கலாம். உங்கள் பெயரை நீங்கள் கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

# உங்களுக்குப் பாதுகாப்பு விசா நிராகரிக்கப்பட்டால்

உங்கள் பாதுகாப்பு விசா விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டால்:

- நீங்கள் செல்லுபடியாகும் விசாவை வைத்திருக்கவில்லை என்றால் நீங்கள் ஆஸ்திரேலியாவை விட்டு வெளியேற வேண்டும்
- எதிர்காலத்தில் ஆஸ்திரேலியாவுக்கு வருகை புரிவது உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் மிகவும் கடினமாக இருக்கலாம்
- உங்கள் நிராகரிப்பு வாழ்நாள் முழுவதும் உங்கள் குடிவரவுப் பதிவேட்டில் இருக்கும்
- நீங்கள் விண்ணப்பிக்கும் விசாவைப் பொறுத்து, எதிர்காலத்தில் ஆஸ்திரேலியாவிற்கு வெளியே உள்ள பிற நாடுகளுக்கான விசா விண்ணப்பங்களைப் பாதிக்கலாம்.

# செல்லத்தக்க விசா இல்லாமல் நீங்கள் ஆஸ்திரேலியாவில் தங்கினால்

ஆஸ்திரேலியாவில் தங்குவதற்கு இனி எந்த உரிமையும் இல்லாத, நிராகரிக்கப்பட்ட பாதுகாப்பு விசா விண்ணப்பதாரர்களை ஆஸ்திரேலிய அரசாங்கம் தடுத்து நிறுத்தி வெளியேற்றுகிறது. இந்த அமலாக்க நடவடிக்கைகள் ஆஸ்திரேலியாவின் குடிவரவு அமைப்பின் ஒருமைப்பாட்டைப் பராமரிக்க உதவுகின்றன.

பாதுகாப்பு விசா நிராகரிக்கப்பட்ட பின் நீங்கள் தடுத்து வைக்கப்பட்டு ஆஸ்திரேலியாவிலிருந்து வெளியேற்றப்பட்டால், உங்களை வெளியேற்றுவதற்கான செலவை நீங்கள் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும். இது ஆயிரக்கணக்கான டாலர்களாக இருக்கலாம்.

# பிற விசாத் தெரிவுகள்

உங்கள் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான மற்ற விசாக்கள் இருக்கலாம்.

உங்களுக்கான சரியான விசாவைக் கண்டறிய உங்கள் தெரிவுகளை ஆராயவும்

# காலாவதியாகும் விசாவிற்கான உதவி

உங்கள் விசா விரைவில் காலாவதியாகப் போகிறதா அல்லது ஏற்கனவே காலாவதியாகிவிட்டதா என்பதைக் கண்டறிய விசா உரிமைச் சரிபார்ப்பு இணையத்தில் (VEVO) உங்கள் விவரங்களை நிரப்பவும்.

உங்கள் குடிவரவு விவகாரங்களைத் தீர்ப்பதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், எங்கள் தகுதிநிலைத் தீர்த்தல் சேவை (Status Resolution Service (SRS)) உங்களுக்கு உதவும். SRS அதிகாரிகள் பின்வருவனவற்றில் உதவுவர்:

- வழக்குத் தீர்ப்பைத் தடுக்கும் தடைகள் அல்லது தடுப்புகளைத் தீர்த்து வைத்தல்
- குடியேற்ற வழிகள் அல்லது புறப்படும் தெரிவுகள் பற்றிய தெளிவான தகவலை வழங்குதல்
- தற்போது சட்டவிரோதமாக தங்கியிருக்கும் தகுதியுள்ள நபர்களுக்கு இடைநிலை விசாக்களை வழங்குதல்.

தகுதிநிலைத் தீர்த்தல் சேவையில் மேலும் அறிந்து கொள்ளவும்.

# உங்கள் விசா விண்ணப்பத்தில் உதவி

நீங்கள் ஒரு பாதுகாப்பு விசாவிற்கு தகுதியுடையவரா என்பதை அறிய, சிறப்பு அந்தஸ்து அகதிகள் மற்றும் குடிவரவுச் சட்ட வழங்குநர்களிடமிருந்து இலவசச் சட்ட உதவியைப் பெற நீங்கள் பலமாக ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.